பண்பாட்டலுவல்கள் திணைக்கள சுற்றுநிருபம் : **2020/05**

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
01.01.2020.

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில்
பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கு,

## வடமாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள் - 2020

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட கலைமன்றங்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் அவற்றின் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துவதற்குமான ஒருசந்தர்ப்பமாக இப் போட்டிகள் அமைகின்றது. தமிழ், சிங்கள மொழிகளில் போட்டிகள் நடத்தப்படும்.

பொது நிபந்தனைகள் :-

1. ஒரு போட்டியாளர் மூன்று போட்டிகளுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
2. குழுப்போட்டிகளில் மன்றத்தின் சார்பில் ஒரு குழுப்போட்டியில் ஒர் குழு மாத்திரமே பங்குபற்ற முடியும்.
3. ஒவ்வொரு போட்டிக்கும் விண்ணப்பதாரர் தனித்தனி விண்ணப்பங்களைத் சமர்ப்பிக்க வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து மன்றத் தலைவரின் சிபார்சுடன் கலாசார உத்தியோகத்தர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். மன்றத் தலைவரின் சிபார்சு இன்றி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
5. அனைத்து ஆக்கங்களும் சுய ஆக்கங்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் மொழிபெயர்ப்பாகவோ அல்லது தழுவலாகவோ இருத்தல் ஆகாது.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
7. போட்டிகள் யாவும் மாவட்டமட்டம், மாகாணமட்டத்தில் நடைபெறும். வெளிப்பாட்டுத் திறன் போட்டிகளில் பங்குகொள்பவர்கள் ஒப்பனை, போக்குவரத்துச் செலவினங்களை தாங்களே பொறுப்பேற்க வேண்டும்
8. போட்டிகள் தொடர்பில் எதுவித போக்குவரத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட மாட்டாது.
9. தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் மன்றத் தலைலவரால் உறுதிப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
10. பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமையாற்றுபவர்கள் இப்போட்டிகளில் பங்குகொள்ள முடியாது.
11. மாவட்டமட்டத்தில் முதல் மூன்று வெற்றிநிலைகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு மாவட்ட பண்பாட்டு விழாவில் சான்றிதழ் வழங்கப்படும்.
12. மாகாணமட்டத்தில் முதல் மூன்று வெற்றிநிலைகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு வடமாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் பரிசளிப்பு நடைபெறும்.

13. குழுப் போட்டிகளில் போட்டியாளர்களின் எண்ணிக்கை 8 முதல் 15 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.
14. போட்டியாளர்கள் குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் வசிப்பவர்களாக இருப்பதுடன் குறித்த மன்றம் ஒன்றினூடாகவே போட்டிகளில் பங்குகொள்ள முடியும்.
15. எந்தவொரு போட்டிகளிலும் பக்கவாத்தியக் கலைஞரகள் போட்டியாளர்களின் எண்ணிக்கைக்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள்.
16. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் போட்டியாளருக்கான போட்டி தொடர்பான விளக்கங்கள் பயிற்சிபட்டறையின் மூலம் வழங்கப்படும்.

போட்டி நிபந்தனைகள்

- குழு நடனம்
  பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் உருப்படி அறிவுறுத்தல்களுக்கமைய ஆற்றுகைப்படுத்த வேண்டும். ஒருகுழுவில் 8-15 போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும்.
- நாடகம்
  பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் தலைப்பு, அறிவுறுத்தல்களுக்மைய 30 நிமிடங்களுக்குட்பட்டதாக ஆற்றுகைப்படுத்தல் வேண்டும். மேடை ஒழுங்கமைப்புக்காக 10 நிமிடங்கள் வழங்கப்படும். போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் நாடகப்பிரதி கையளிக்கப்படல் வேண்டும். ஒரு குழுவில் 8-15 போட்டியாளர்கள் பங்குபற்ற முடியும்.
- வில்லுப்பாட்டு
  பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் தலைப்பு, அறிவுறுத்தல்களுக்கமைய 20 – 30 நிமிடங்களுக்குட்பட்டதாக இருப்பதுடன் பக்கவாத்தியங்களில் ஆர்மோனியம் அவசியமாக பயன்படுத்துதல் வேண்டும். அரசியல் ரீதியான கருத்துக்கள், பிறர் மனம் நோகச்செய்யும் கருத்துக்கள் இருத்தல் கூடாது.
- நாட்டியநாடகம்
  பயிற்சிபட்டறையில் வழங்கப்படும் தலைப்பு, அறிவுறுத்தலுக்கமைய 15 – 20 நிமிடங்களுக்குட்பட்டதாக ஆற்றுகைப்படுத்தப்பட வேண்டும்.
- கவிதையாக்கம்.
  போட்டியாளருக்கு கவிதைக்கான தலைப்பு போட்டி நடைபெறும்போது வழங்கப்படும். வழங்கப்பட்ட தலைப்பில் குறித்த நேரத்தினுள் எழுதுதல் வேண்டும். ஆக்கம் மரபுக் கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ அமையலாம்.
- பாடலாக்கம்
  3½ நிமிடங்களுக்கு உட்பட்டதாக பாடல் இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒரு ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- ஓவியம்
  பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் தலைப்பு, அறிவுறுத்தல்களுக்கமைய கொடுக்கப்படும் நேரத்திற்குள் வரையப்பட வேண்டும். அதற்குரிய தாள்கள் வழங்கப்படும். ஏனைய பொருட்களை போட்டியாளர் கொண்டு வருதல் வேண்டும்.
  போட்டி மூன்று பிரிவுகளில் நடைபெறும்
  (10 வயதிற்குகீழ் - கீழ்ப்பிரிவு, 10 – 18 வயது - இடைநிலைபிரிவு,
  18 வயதிற்குமேல் - மேற்பிரிவு)

- தனிநடனம்

பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் உருப்படி அறிவுறுத்தல்களுக்கமைய 10 நிமிடங்களுக்குட்பட்டதாக ஆற்றுகைப்படுத்த வேண்டும். மூன்று பிரிவுகளில் நடைபெறும் (10 வயதிற்குகீழ் - கீழ்ப்பிரிவு, 10 – 18 வயது - இடைநிலைபிரிவு, 18 வயதிற்குமேல் - மேற்பிரிவு)

- தனிநடிப்பு

பயிற்சிப் பட்டறையில் வழங்கப்படும் தலைப்பு அறிவுறுத்தல்களுக்கமைய 5 நிமிடங்களுக்குட்பட்டதாக ஆற்றுகைப்படுத்த வேண்டும். மூன்று பிரிவுகளில் நடைபெறும் (10 வயதிற்கு கீழ் - கீழ்ப்பிரிவு, 10-18 வயது - இடைநிலைபிரிவு, 18 வயதிற்குமேல் - மேற்பிரிவு)

- வாய்ப்பாட்டு

வழங்கப்படும் காலத்திலும் வழங்கப்படும் தலைப்பில் பாடல் ஆக்கப்படுதல் வேண்டும். 3-5 நிமிடங்களுக்கு உட்பட்டதாக பாடல் இருப்பதுடன் இசைநயத்துடன் கூடிய ஒரு ஒழுங்கினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(கர்நாடகசங்கீதம், கிராமியப் பாடல்கள், உள்ளூர் கலைஞர்களின் பாடல்களை இசை வடிவில் பாடுதல் வேண்டும், (10 வயதிற்குகீழ் - கீழ்ப்பிரிவு, 10-18 வயது இடைநிலைபிரிவு, 18 வயதிற்குமேல் - மேற்பிரிவு)

## பாரம்பரிய ஆற்றுகைப் போட்டிகள்

1.கூத்து

மன்னார்ப்பாங்கு, முல்லைமோடி, வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து 30 நிமிடங்களுக்குட்பட்டதாக ஆற்றுகைப்படுத்தல் வேண்டும். மேடை ஒழுங்கமைப்புக்காக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

2.இசைநாடகம்

30நிமிடங்களுக்குட்பட்டதாக ஆற்றுகைப்படுத்தல் வேண்டும். மேடை ஒழுங்கமைப்புக்காக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

பாரம்பரிய கலைவடிவங்களில் இங்கு குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக கலை மன்றங்களிடையே தனித்தனியாக இப்போட்டிகள் நடத்தப்படும்.

## திருக்குறள் போட்டி

1. கட்டுரை – திருக்குறள் கட்டுரைப் போட்டி 3 பிரிவுகளில் நடைபெறும்.

(10 வயதிற்குகீழ் - கீழ்ப்பிரிவு, 10 - 18 வயது - இடைநிலைபிரிவு, 18 வயதிற்குமேல் - மேற்பிரிவு)

போட்டிக்கான தலைப்பு பயிற்சிப்பட்டறையின் போது வழங்கப்படும்.

10 வயதிற்கு உட்பட்டோர் - 100 சொற்களுக்கு குறையாமலும்,

10 - 18 வயதுப்பிரிவு - 300 சொற்களுக்கு குறையாமல்,

18 வயதிற்குமேல் - 500 சொற்களுக்கு குறையாமலும் கட்டுரை அமைதல் வேண்டும்.

2. குறள் மனனம் - இப் போட்டி 2 பிரிவுகளில் நடைபெறும்

10 வயதிற்குகீழ் - கீழ்ப்பிரிவு, 10 - 18 வயது - இடைநிலைபிரிவு

போட்டிக்கான தலைப்பு பயிற்சிப்பட்டறையின் போது வழங்கப்படும்.

3. குறலோடு விளையாடுதல் - இப் போட்டி 2 பிரிவுகளில் நடைபெறும்

10 - 18 வயது - இடைநிலைபிரிவு, 18 வயதிற்குமேல் - மேற்பிரிவு

போட்டிக்கான தலைப்பு பயிற்சிப்பட்டறையின் போது வழங்கப்படும்.

## பரிசில்கள் விபரம்

நாடகம் / நாட்டியநாடகம் / வில்லுப்பாட்டு / பாரம்பரிய ஆற்றுகைகள்

1ம் இடம் - ரூ.25,000.00

2ஆம் இடம் - ரூ.20,000.00

3ஆம் இடம் - ரூ.15,000.00

குழுநடனம்

1ம் இடம் - ரூ.15,000.00

2ஆம் இடம் - ரூ.10,000.00

3ஆம் இடம் - ரூ.7,000.00

ஏனைய போட்டிகள்

1ம் இடம் - ரூ.5,000.00

2ஆம் இடம் - ரூ.3,000.00

3ஆம் இடம் - ரூ.2,000.00

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்கள் மேற்படி போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31.03.2020 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு கிடைக்ககூடியவாறு தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தருடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.
உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
விண்ணப்ப படிவத்தினை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது வட மாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : www.np.gov.lk / www.edumin.np.gov.lk

தொலைபேசி இல. : 0212054105 / 0213202568

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

இ.இளங்கோவன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.